திருவாசகம் - 31



# கண்டபத்து கதைவழியில்

கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# கண்டபத்து கதை வடிவில் நிருத்த தரிசனம் தில்லையில் அருளியது

**இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்**

**அந்தரமே திரிந்துபோய் அருநகரில் வீழ்வேற்குச்**

**சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட**

**அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே 01**

பூங்குழலி நல்ல அழகி. அவளது உருவத்தைப் பிரமன் அளந்தளந்து செய்தது போல அவை மிகுந்த கவர்ச்சியைக் கொடுத்தன. அவள் பாடசாலையில் கற்கும்போது நடனத்தை ஒரு பாடமாக பயின்றவள். பின் நடன ஆசிரியையான சரஸ்வதி தேவியிடம் முறையாக நடனம் பயின்றவள். அதனால் ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து பிரபலமான ஒரு பெண்கள் கற்கும் பாடசாலையில் நடன ஆசிரியை ஆனவள். அவள் அப் பாடசாலையில் நியமிக்கப்பட்ட பின்பு அப்பாடசாலை தான் நடனத்துறையில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியது. அவள் ஆடினால் சபையோர் மெய்மறந்து ரசிப்பர்.

அப்பாடசாலையின் கணித ஆசிரியர் மெய்யழகன். அவனுக்கு பூங்குழலி மீது அளவற்ற மோகம். அவளை எந்நேரமும் ஏதோ ஒரு வகையில் தொடர்பு கொண்டு கதைப்பான். அது அவளுக்குப் பிடிப்பதில்லை. அதனால் அவன் சொன்னாள்; "மெய்யழகா, எனக்கு யார் மீதும் காதல் இல்லை. பாடசாலையில் பலர் இருவரும் காதலிப்பதாக கதைக்கின்றனர். அது எனக்கு விருப்பமில்லை. அதனால் என்னோடு இனிமேல் கதைக்காதே" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டாள். அதன் பின் மெய்யழகன் பலமுறை கதைக்க முயன்றும் அவள் கதைக்கவில்லை. அதனால் மெய்யழகன் ஓர் ஆசிரியரை அவளுடன் கதைக்கும்படி கூற அவர் அவளுடன் கதைத்தபோது அவள் சொன்னாள்; "ஐயா காதல் என்பது இருவரது மனதிலும் உருவாக வேண்டும். ஒருவரின் மனதில் உருவாவது காதல் அல்ல. அது காமம். மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவது போல ஐம்பொறிகளில் பொருந்திய வாழ்வு மரணத்திற்கும் நரகத்திற்கும் வழிவகுக்கும்.

அதிலிருந்து மீள்வது தான் சிவனை அடைவதற்கான வழி என்றும், அதைச் சிவன் தில்லையில் தனக்கு அருளியதாகச் சொல்கிறார். நான் அவரைப் போல வாழ விரும்பவில்லை. ஆனால் ஐம்பொறிகளின் வசப்பட விரும்பவில்லை. நான் அவனில் பார்க்க சாதி குறைந்தவள். அதை அவனது குடும்பம் ஏற்காது. அதனால் நரக வாழ்வு தான் வாழவேண்டிய நிலை உருவாகும். இன்று எனது கவர்ச்சியால் அன்பு செலுத்தும் அவன் ஐம்பொறிகளின் உந்துதலால் பின்பு மனம் மாறினால் வாழ்வு நரகமாகி விடும். அதனால் நான் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கமாட்டேன்" என்றாள்.

**வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்**

**தனைச்சிறுதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை**

**எனைப்பெரிதும் ஆட்கொண்டேன் பிறப்பறுத்த இணையிலியை**

**அனைத்துலகுந் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே 02**

"ஐயா, எனது நிலை உங்களது மகளுக்கு ஏற்பட்டால் நீங்கள் அதை அங்கீகரிப்பீர்களா?" என்று பூங்குழலி கேட்டபோது அவ் ஆசிரியர் எதுவும் பேசவில்லை.

"இதை உங்களால் அல்ல யாராலும் ஏற்கமுடியாது. ஏனென்றால் எமது சமூக அமைப்பை மீறுவதும் ஐம்பொறிகளின் ஆதிக்கத்தால் தான். ஐம்பொறிகள் ஆரம்பத்தில் எதையும் ஆராயாது உணர்ச்சிகளுக்கே முதலிடம் கொடுக்கும். பின் பிரச்சினைகள் வந்தால் அதிலிருந்து தப்பிக்கப் போராடும். இது ஆசிரியரான உங்களுக்குப் புரியும். சிவசிந்தனை உள்ளவர்களை வினையின் விளைவாகிய இன்ப துன்பங்கள் தாக்கமாட்டாது. ஏனென்றால் அனைத்தையும் படைத்தவன் சிவன். அவன் தான் உலகைத் தொழிற்படுத்துகிறான். சாதி, சமயம், அழகு, அந்தஸ்து என்பவற்றைப் படைத்து அவரவர் வினைக்கேற்பக் கொடுப்பவனும் அவன் தான். அதனால் அதை மீறக்கூடாது. மீறினால் நரகம் தான் கிடைக்கும். சிவனை ஒழுங்காக வணங்கமுடியாது. மாணிக்கவாசக சுவாமிகள்; "நான் வினையின் வசப்பட்டவன். அத்தகைய என்னை அவன் தில்லையில் ஆட்கொண்டவன்'' என்கிறார். அதிலிருந்து என்ன தெரிகிறது. எல்லோரும் வினைக்கு ஆட்பட்டவர்கள். அதை உணர்ந்து வாழவேண்டும். சிவனை வணங்கவேண்டும். வினையால் வரும் துன்பங்களை உணராதவர்கள் தான் துன்பங்களை அனுபவிக்கிறார்கள்'' என்றாள் பூங்குழலி.

**உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்**

**கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட**

**திருத்திருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை அருத்தியினால்**

**நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே 03**

“ஐயா, எனக்கு விருத்தெரியாத பருவத்தில் எனது தந்தையோடு சிவன் கோவிலுக்குச் சென்று வணங்குவேன். நான் நடக்கத் தொடங்கிய பின்பு வீட்டில் அப்பா பூக்களைப் பறித்துச் சிவனுக்குச் சூடிச் சிவபூசை செய்வார். நானும் அவருடன் பூப்பறிப்பேன். அப்பா கட்டிய மாலையை சிவனுக்குச் சூட்டுவேன். சிவனை வணங்குவேன். அப்பா சொல்வார்; ‘‘நம்மை நல்லமுறையில் வாழ வைப்பவன் சிவன். அவனருளால் அழகிய வீட்டைக் கட்டினேன். நல்ல தொழில் கிடைத்தது. உணவுக்குப் பஞ்சமில்லை. அதைவிட அழகும் நற்குணங்களும் அறிவும் மிக்க பிள்ளைகளைச் சிவன் தந்துள்ளான். இதற்காக நாம் சிவனுக்கு நன்றிக் கடன் உள்ளவர்களாக இருக்க வேண்டும்” என்பார். அது உண்மை. விருத்தெரியாத பருவத்தில் என்னால் துதிக்கப்பட்ட சிவன் எனக்கு எல்லாவற்றையும் தந்துள்ளான். நல்ல ஒழுக்கமான, வசதியான பெற்றோர், உயர்கல்வி, நல்ல அழகு, அறிவு என்றெல்லாம் தந்த சிவனை நினைக்க மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவது போலச் சிவனின் மீது ஆசை அதிகரிக்கிறது. அவன் எனக்குப் பொருத்தமான கணவனையும் தருவான். எனது மாமனின் மகன் பொறியியலாளர். அவர்களுக்கு என்னைத் திருமணம் செய்ய நல்ல விருப்பம். நல்ல ஒரு நாளில் கேட்போம் என்று அப்பா சொல்லியுள்ளார். அப்பா எனக்குச் சிவன் மாதிரி. அவரின் மனதைக் குழப்ப என்னால் முடியாது’’ என்றார் பூங்குழலி.

**கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை**

**வல்லாகி னாய்வந்து வனப்பெய்தி யிருக்கும் வண்ணம்**

**பல்லோருங் காண என்றன் பசுபாசம் அறுத்தானை**

**எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே 04**

‘‘ஐயா, தற்போதைய இளைஞர்கள் இறைவனை நம்புவதில்லை. மெய்யழகன் விஞ்ஞானப்பட்டதாரி. அதனால் பெரும் புத்திமான் போல நடந்து கொள்கிறார். கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் சைவசமயத்தவர் கூறுவது போல

மாயாஜல வித்தைகள் காண்பிப்பதில்லை. திருநாவுக்கரசரைக் கல்லில் கட்டிக் கடலில் வீசியபோது அவர் சிவனை நினைத்துத் தேவாரம் பாடக் கல் தெப்பமாக மிதந்தது. பெரும்புழுகு என்கிறார். அவருக்கு அதில் நம்பிக்கை இல்லாவிட்டால் நம்பியவர்களைக் குழப்பலாமா..? இந்த ஒரு செயலே அவர் சமூகத்துடன் ஒத்துப் போகாதவர் என்பதைக் காட்டுகிறது. எல்லாவற்றிற்கும் மாணிக்கவாசகரை உதாரணமாகக் கொள்ள முடியும். அவர் சொல்கிறார்; ''புல்லறிவுடைய கல்லாத நாய் போன்ற கீழான பிறவியெடுத்த என்னை மேலோனாக்கி மலங்களை அகற்றி என்னை ஆட்கொண்டவனைத் தில்லையில் கண்டேன்'' என்கிறார். இதை அவர் நம்புவாரா. அப்பா சொல்வது போல எமக்கு எல்லாவற்றையும் தந்தவன் சிவன். போர் நடைபெற்ற காலத்தில் எனது அண்ணாவை இராணுவத்தினர் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர். அப்பா முகாமுக்குச் செல்லாது சிவபூசை செய்து கொண்டிருந்தார். இராணுவத்தினர் அண்ணன் கற்ற பாடசாலை அதிபரை அழைத்து அண்ணனை அவரிடம் ஒப்படைத்தனர். இது எல்லோருக்கும் தெரியும். எல்லோரும் அதற்குக் காரணம் அப்பாவின் சிவபக்தி என்று சொல்ல மெய்யழகனும் சில ஆசிரியர்களும் சிரித்தார்கள். ஒரு பொருளை உண்டென்று நினைத்தால் தான் அது உண்டு. உள்ள பொருளை இல்லை என்று சொன்னால் என்ன செய்ய முடியும்'' என்று கேட்டாள் பூங்குழலி.

**சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்**
**ஆதமிலி நாயேனை அல்லலுறுந் தாட்கொண்டு**
**பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக்**
**கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே 05**

''ஐயா வணங்குபவர்களுக்குச் சாதி, குலம் என்பன இல்லை. உயர்வு, தாழ்வு இல்லை என்று மாணிக்கவாசகசுவாமிகள் கூறுகிறார். அவர், "சாதி, குலம், பிறப்பு என்று தடுமாறிய என்னை அதிலிருந்து காப்பாற்றினார். அதனால் சிறுமைகள் அனைத்திற்கும் உறைவிடமாகிய சிவபோதத்தை என்னிடமிருந்து அகற்றிய அமிர்த சாகரமானவன் சிவன்" என்கிறார். ஆனால் இங்குள்ள பெரும் சிவபக்தர்கள் தமது சாதியை உயர்த்தாமலா இருக்கிறார்கள்? தனக்கு முன்னால் தனது வீட்டில் வேலை செய்யும் ஒரு சாதி குறைந்தவன் தோளில் சால்வையைப் போட்டதற்காகச் சிவலிங்கம் என்ற பெரியவர் அவனை அடித்தவர். ஆனால் அவன் சீவிக் கொடுக்கிற கள்ளைத்தானே விரும்பிக் குடிக்கிறார். கள்ளு என்ன புனித தீர்த்தமா…? இதெல்லாம் என்ன வாழ்க்கை. இப்படி வாழ வெட்கம் இல்லையா..? சிவன் சாதியா பார்க்கிறான்.

எல்லோரின் உள்ளத்திலும் இருக்கும் அவன் ஒழுக்கமானவர்களின் உள்ளத்தில் மகிழ்வுடன் இருந்து அவர்களைச் செயற்பட வைக்கிறான். அப்பாவும் சிவபக்தர். சிவலிங்கமும் சிவபக்தர். அப்பா முழுமையாகத் தன்னைச் சிவனிடம் ஒப்படைத்தமையால் மகிழ்வுடன் வசதியாக வாழ்கிறார். சிவலிங்கம் ஒப்புக்குச் சிவனை வணங்குவதால் பெரும் துன்பப்படுகிறார். அவரது பிள்ளைகள் படிக்கவில்லை. இது தான் வழிபாட்டின் சிறப்பு" என்றாள் பூங்குழலி.

**பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டும்**

**உறவினொடும் ஒழியச்சென் றுலகுடைய ஒருமுதலைச்**

**செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம்பலம் மன்னி**

**மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே 06**

அன்று முதியோர் தினம் ஆச்சிரமத்திற் கொண்டாடப்பட்டது. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தலைமையில் நடைபெற்ற அந்நிகழ்வின்போது பூங்குழலியின் மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் நடைபெற இருந்தன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் விழாவை ஆரம்பித்து வைத்தார்; "அன்பான மூத்த பிரஜைகளே, நல்லமுறையில் வாழ்ந்த நீங்கள் எதிர்காலத்திலும் வலிமையுடன் வாழ வேண்டும் என்று சிவனைப் பிரார்த்திக்கின்றேன். சிவன் உலகிற்கு முதல்வன். பிறவி, பிணி முதலியவற்றை நீக்குபவன். மாணிக்கவாசக சுவாமிகள்; "சிவனே எனது பிறவியையும் நோய்களையும் நீக்கியவன் நீ. பிறவியை மாற்றுபவனும் நீ, பிணியையும் மூப்பையும் ஒழிப்பவன் நீ" என்று சொல்கிறார். அது உங்களுக்குத் தெரியும். நீங்கள் அனைவரும் உற்சாகமாக இருக்கிறீர்கள், சிவ சிந்தனையுடன் இருக்கிறீர்கள் என்பதைப் பார்த்ததும் உணர்ந்து கொண்டேன். சிவனை வழிபடுங்கள் உங்கள் மூப்பும் பிணியும் அகலும். எனது பிரசங்கத்தை அடிக்கடி கேட்பதால் உங்களுக்குச் சலிப்புத் தட்டிவிடும். பூங்குழலியின் நடனத்தை ரசிக்க வந்திருக்கும் நீங்கள் அதைப் பார்த்து ரசியுங்கள்" என்றவார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்**

**பித்தனிவன் எனஎன்னை ஆக்குவித்துப் பேராமே**

**சித்தமெனுந் திண்கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்த**

**வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே 07**

அப்போது சபையில் இருந்த ஏரம்பமூர்த்தி என்பவர் “அரோகரா” என்று கோசமிட்டபடி எழுந்து சுவாமியாரின் அருகில் வந்தார். அவரது உடல் நடுங்கியது. பூங்குழலி ஒரு சிறந்த ஆசிரியை. அவளுக்கு ஒரு கண்டம் இருக்கிறது. சுவாமியார் தான் காப்பற்ற வேண்டும். அவள் பெரும் சிவபக்தை. அவளுக்குத் துன்பம் வரச் சிவன் விடான். டேய் சிவலிங்கம், ஈஸ்வரத் துரோகி. இங்கு ஏன் வந்தாய். வெளியே போ நீ செல்லுமிடம் பாவப்பட்டு விடும். எழும்பிப்போடா” என்று சத்தமிட்டார். மெய்யழகன் மிகுந்த கோபத்துடன் எழுந்த வந்து, “விசரா என்ன கதைக்கிறாய் என்று விளங்கியா கதைக்கிறாய். உனக்குச் சிவபோதம் ஏற்படவில்லை. பித்துப் பிடித்துள்ளது” என்று ஏசினான். அப்போது அங்கு வந்த கதிரேசன் சொன்னார்; “மகனே, பதவிக்குத் தகுந்த அடக்கம் வேண்டும். ஓர் ஆசிரியனான நீ ஒரு பொது இடத்தில் இவ்வாறா நடப்பது”? உன்னிடம் கற்கும் மாணவர்களும், பொதுமக்களும் பார்த்துக்கொண்டு நிற்கின்றனர். அதனால் எதுவும் பேசாதே. ஏரம்பமூர்த்தி சிவபக்தர். அவர் தன்னை அறியாது பலவற்றையும் கதைப்பார். அது சிவனது செயல். சீவனில் உள்ள பற்று அழியும்போது அது சிவபோதமாகிவிடும். அதன்பின் நடப்பவை எவையும் அவர்களுக்குத் தெரியாது. அதனால் தான் அப்படியான நிறைஞானிகள் பித்துப் பிடித்தவர்கள் போல நடந்து கொள்வார்கள். அறியாமை மிக்கவர்கள் அவர்களைப் பித்தர் என்பர். அவர்கள் பித்தர்களைப் போல உழறுவதில்லை. தம்மை மறந்து உண்மையைச் சொல்லி விடுவார்கள். நீ இன்று பூங்குழலியின் நிகழ்வைக் குழப்பி அவளை அவமானப்படுத்த விரும்பியதைச் சிவன் ஏரம்பமூர்த்தியின் வாயால் வெளிப்படுத்தியுள்ளார். குழப்பம் விளைவிக்க நீங்கள் வந்ததை நான் காவல்துறை அதிகாரிக்கு அறிவித்து விட்டேன். மதிப்புக் கெடுமுன் உனது நண்பர்களை அழைத்துக் கொண்டு போ” என்றார் கதிரேசன்.

மெய்யழகன் திகைத்துப் போனான். தொடர்ந்து விவாதித்தால் கரைச்சல் என்று நினைத்து வெளியே சென்றான்.

**அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டிங் கறிவின்றி**

**விளைவொன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு**

**அளவிலா ஆனந்தம் அளித்தென்னை ஆண்டானைக்**

**களவிலா வானவருக் தொழுதில்லை கண்டேனே 08**

ஏரம்பமூர்த்தியைச் சூழ்ந்து மக்கள் நின்றனர். அவர் எதையும் பேசாது ஆச்சிரமத்திலுள்ள சிவன்கோவிலுக்குச் சென்று மண்டபத்தில் அமர்ந்தார். அப்பொழுது

பூங்குழலி சுவாமியாரைக் கேட்டாள்; “நிறை ஞானியைப் பித்தன் என்கின்றனர். அதன்பின் அவரது நிலை என்ன?” என்றாள்; “மகளே, மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னதைச் சொல்கிறேன். “நிறைஞானி பித்தனைப்போலப் பேசுவார். பின் தன் நினைவை இழப்பார். அவருக்கும் பிணத்துக்கும் அப்போது வேறுபாடு இராது. அவருக்கு உலகத்தில் நடப்பவை எதுவும் தெரியாது மரக்கட்டைபோலக் கிடப்பார். அகத்துக்குள்ளே சிவனோடு உறவாடுவார்” என்று கூறியுள்ளார். இதற்கு மேல் எதையும் சொல்லவில்லை” என்றர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**பாங்கினொடு பரிசொன்றும் அறியாத நாயேனே**

**ஓங்கியுளத் தொளிவளர உலப்பிலா அன்பருளி**

**வாங்கிவினை மலம்அறுத்து வான்கருணை தந்தானை**

**நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே 09**

“மகளே, பரிபாகமாகிய மன ஒடுக்கத்தை அடையாத என்னைச் சிவன் தன்மயமாக்கிக் கொண்டான். அது அவனது ஒப்பற்ற கருணை என்கிறார். அறிந்தவர்கள்தான் தகவல்களைச் சொல்ல வேண்டும். உண்டவர்கள் தான் சுவையைச் சொல்ல வேண்டும். மதுபானத்தின் சுவை எப்படியானது என்று குடிக்காதவனைக் கேட்டால் அவன் எப்படிச் சொல்வான்?” என்று கேட்டார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்**

**பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமில்லாப் பெருமையனைக்**

**கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை**

**வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே 10**

“மகளே, ஐம்பூதங்களாகி, ஐம்புலன்களுமாகி, அனைத்துப் பொருள்களுமாகி, போதங்கள் அனைத்துமாகிய போதும் வேறுபாடடையாத பெருமையில்லாத பேரொளிப் பிழம்பான பரமன் என்றும், அபேதமான தனிப் பொருளாகத் திகழ்கிறான்” என்றும் மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறர். இதைத் தவிர வேறு எதுவும் யாருக்கும் தெரியாது. ஏனென்றால் மாணிக்கவாசகரைப் போன்ற அருளாளர்களைக் காண முடியாது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

*திருச்சிற்றம்பலம்.*